**ஜனவரி – 06**

# TNPSC துளிகள்

- மத்தியக் கல்வி அமைச்சர் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் தர்மேந்திர பிரதான் "தேசியத் தொழில்நுட்பக் கல்விக் கூட்டணி 3.0" என்ற ஒரு திட்டத்தினைத் தொடங்கி வைத்தார்.
    - இந்தத் திட்டமானது இந்தியாவிலுள்ள மாணவர்களுக்குச் சிறப்பான முறையில் உருவாக்கப்பட்ட கல்விக்கான தொழில்நுட்பத்தினையும் பாடத்திட்டங்களையும் வழங்குவதற்கான ஒரு தளமாக தொடங்கப்பட்டது.

# தேசியச் செய்திகள்

## ஆயுஷ் ஆஹார்




- இத்திட்டமானது ஆயுஷ் அமைச்சகத்தினால் தொடங்கப்பட்டது.
- ஆயுஷ் ஆஹார் என்பது ஓர் ஆரோக்கியமான உணவு முறை ஆகும்.
- ஆயுஷ் அமைச்சகமானது இந்த உணவுமுறையை தனது உணவகங்களில் கிடைக்கப் பெறச் செய்ய உள்ளது.
- ஊட்டச்சத்து மிக்க உணவுமுறை மூலமாக ஒரு ஆரோக்கியமான வாழ்வு முறையை மேம்படுத்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

## ஒருங்கிணைந்த வழங்கீட்டு மேலாண்மை அமைப்பு

- இந்தியத் தேசியப் பணவழங்கீட்டுக் கழகத்தின் கட்டண வழங்கீட்டு நிறுவனமானது ஒருங்கிணைந்த வழங்கீட்டு மேலாண்மை அமைப்பு என்ற ஒரு தனித்துவம் மிக்க செயல்முறையை அறிமுகப்படுத்தியுள்ளது.
- இந்தியாவில் பண (கட்டண) வழங்கீடுகளைச் செழுமைப்படுத்தி எளிமையாக்கும் ஒரு நோக்குடன் இது அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது.
- இந்த அமைப்பானது, வாடிக்கையாளர்கள் தாங்கள் தொடர்ச்சியாக செலுத்த வேண்டிய கட்டணங்கள் குறித்து எந்த வடிவிலும் எந்த தளத்திடமிருந்தும் தரமான வழி முறைகளைப் பெறுவதற்கு உதவும்.
- இந்தக் கட்டணங்களானது, கட்டணம் செலுத்துதல் மற்றும் தானியங்குக் கட்டணம் செலுத்துதல் போன்றவற்றைக் கட்டணம் விதிப்பவர்களிடமிருந்து தானாகப் பெற்று

வாடிக்கையாளர்களிடம் பணம் செலுத்துவதற்காக அனுப்பப்படும்.



NPCI


BHARAT BILLPAY

**NBBL launches Unified Presentment Management System (UPMS) to simplify bill payments** 04/01/2022

With an aim to enrich and simplify bill payments in the country, NPCI Bharat BillPay Ltd. (NBBL), the wholly-owned subsidiary of National Payments Corporation of India has introduced a unique functionality called 'Unified Presentment Management System' (UPMS). NBBL through UPMS will enable the customers to set up standing instructions - from any channel and for any mode on their recurring bill payments. The bills will be automatically fetched from the billers and presented to customers for their action, in terms of auto-debit and bill payment management.

With the UPMS launch, the intent is to enable all the Bharat BillPay Operating Units (BBPOU) to extend this facility to their customers/corporate clients with minimal effort through the centralized infrastructure and application support provided by Bharat BillPay Central Unit(BBPCU). UPMS will help in democratizing recurring bill payments and making them further convenient for customers.

## சட்டப்பூர்வ ரீதியில் திருமண வயதை உயர்த்துவதற்கான மசோதாவினை ஆய்வு செய்வதற்கான குழு




- 2021 ஆம் ஆண்டு குழந்தைத் திருமணத் தடை (திருத்தம்) என்ற மசோதாவினை ஆய்வு செய்வதற்காக பாராளுமன்ற நிலைக் குழு அமைக்கப்பட்டுள்ளது.
- மொத்தம் உள்ள 31 உறுப்பினர்களில் திரிணாமுல் காங்கிரஸ் கட்சியின் பெண் பாராளுமன்ற உறுப்பினர் சுஷ்மிதா தேவ் மட்டுமே ஒரே ஒரு பெண் பிரதிநிதி ஆக இதில் உள்ளார்.
- இந்த மசோதாவானது ஆண்களுக்கு நிகராக பெண்களின் திருமண வயதினையும் உயர்த்திட அதனை 18 வயதிலிருந்து 21 வயதாக நிர்ணயிப்பதற்கு விழைகிறது.
- 2021 ஆம் ஆண்டின் குழந்தைத் திருமணத் தடை (திருத்தம்) மசோதாவானது 2006 ஆம் ஆண்டின் குழந்தைத் திருமணத் தடைச் சட்டத்தினையும் ஏழு தனிநபர் மீதான சட்டங்களையும் திருத்தி அமைக்க முனைகிறது.
- அவை
  - இந்தியக் கிறித்துவத் திருமணச் சட்டம்,
  - பாரசீக திருமணம் மற்றும் விவாகரத்துச் சட்டம்,
  - இஸ்லாமியத் தனிநபர் சட்டத்தின் (சரியத்) பயன்பாட்டுச் சட்டம்

- சிறப்புத் திருமணச் சட்டம்
- இந்து திருமணச் சட்டம் மற்றும்
- வெளிநாட்டுத் திருமணச் சட்டம் ஆகியனவாகும்.

## மிலன் கடற்படைப் பயிற்சி 2022




❖ விசாகப் பட்டினத்தில் நடைபெற உள்ள மிலன் எனும் ஒரு பன்னாட்டுக் கடற்படைப் பயிற்சியில் பங்கேற்பதற்கு மொத்தம் 46 நட்பு நாடுகளுக்கு இந்தியா அழைப்பு விடுத்துள்ளது.

❖ இந்த 11வது மிலன் பயிற்சியின் கருத்துரு, "தோழமை, ஒற்றுமை மற்றும் ஒத்துழைப்பு" என்பதாகும்.

❖ இந்தப் பயிற்சியானது 1995 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டு இரண்டாண்டுகளுக்கு ஒரு முறை நட்பு நாடுகளுடன் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## திறந்தவெளிக் கழிப்பிடமற்ற கிராமங்கள்



ODF Plus (Aspiring + Rising + Model) Declaration Status of States (as on 31.12.2021)

| Sl No | Name of the State | Total Villages | Total ODF Plus Villages | % |
|---|---|---|---|---|
| 1 | Telangana | 14200 | 13737 | 96.74 |
| 2 | Tamilnadu | 12525 | 4432 | 35.39 |
| 3 | Karnataka | 27044 | 1511 | 5.59 |
| 4 | Uttakhand | 15473 | 1394 | 9.01 |
| 5 | Madhya Pradesh | 50228 | 1073 | 2.14 |
| 6 | Andhra Pradesh | 18841 | 873 | 4.63 |
| 7 | U.P | 97040 | 649 | 0.67 |
| 8 | Kerala | 2027 | 401 | 19.78 |
| 9 | Haryana | 6908 | 397 | 5.75 |
| 10 | Punjab | 13707 | 304 | 2.22 |
| 11 | Maharastra | 40543 | 299 | 0.74 |
| 12 | Himachal Pradesh | 15921 | 278 | 1.75 |
| 13 | Rajasthan | 42860 | 220 | 0.51 |
| 14 | Meghalaya | 6028 | 178 | 2.95 |
| 15 | Jharkhand | 29564 | 146 | 0.49 |
| 16 | Odisha | 46785 | 124 | 0.27 |
| 17 | Gujarat | 18261 | 83 | 0.45 |
| 18 | Assam | 25503 | 17 | 0.07 |
| 19 | Sikkim | 403 | 11 | 2.73 |
| 20 | Arunachal Pradesh | 5381 | 6 | 0.11 |
| 21 | Manipur | 2556 | 5 | 0.20 |
| 22 | J &K | 7263 | 0 | 0.00 |
| 23 | Bihar | 38691 | 0 | 0.00 |
| 24 | West Bengal | 41461 | 0 | 0.00 |
| 25 | Nagaland | 1451 | 0 | 0.00 |
| 26 | Mizoram | 696 | 0 | 0.00 |
| 27 | Tripura | 1178 | 0 | 0.00 |
| 28 | Goa | 365 | 0 | 0.00 |
| | Total | 582903 | 26138 | 4.48 |

Source: https//sbm.gov.in>phase2dashboard

❖ 2021 ஆம் ஆண்டு டிசம்பர் 31 வரையில், சுவச் பாரத் திட்டத்தின் (கிராமின்) இரண்டாம் கட்டத்தின் கீழ் திறந்தவெளிக் கழிப்பிடமற்ற வகையிலான கிராமங்களை அதிகம் கொண்ட மாநிலமாக தெலுங்கானா முதலிடத்தைப் பெற்றுள்ளது.


❖ இதனைத் தொடர்ந்து தமிழ்நாடு மற்றும் கர்நாடகா ஆகிய மாநிலங்கள் உள்ளன.

## 2021 ஆம் ஆண்டில் இந்தியாவில் தங்க இறக்குமதி

❖ இந்தியாவின் தங்க இறக்குமதி மீதான மதிப்பானது 2020 ஆம் ஆண்டில் பெறப்பட்ட 22

பில்லியன் டாலரை விட 2021 ஆம் ஆண்டில் இரட்டிப்படைந்தது.

- 2021 ஆம் ஆண்டில் இந்தியாவில் 55.7 பில்லியன் டாலர் என்ற அளவில் தங்க இறக்குமதி பதிவாகி உள்ளது.
- 2011 ஆம் ஆண்டில் பதிவான மதிப்பையும் (53.9 பில்லியன் டாலர்) இது விஞ்சியுள்ளது.
- 2020 ஆம் ஆண்டில் ஏற்பட்ட கோவிட்-19 தொற்றின் முதல் அலையின் போது விதிக்கப் பட்ட கடுமையான பொது முடக்கத்தினால் தங்கத்தின் தேவை சரிந்தது.




# சர்வதேசச் செய்திகள்

## அணுசக்திப் போர் குறித்த ஐ.நா. பாதுகாப்புச் சபையின் அறிக்கை

- அணுசக்திப் போர் குறித்த ஐ.நா. பாதுகாப்புச் சபையின் ஒரு அறிக்கையினை க்ரெம்ளின் (ரஷ்யா) வெளியிட்டது.
- ரஷ்யா, சீனா, பிரிட்டன், அமெரிக்கா மற்றும் பிரான்சு போன்ற அணுசக்தித் திறன் கொண்ட ஐந்து நாடுகள், அணு ஆயுதங்களை மேலும் பயன்படுத்தப் படுவதினையும் அணுசக்திப் போர் நிகழ்தலைத் தவிர்க்கச் செய்வதினையும் மேற்கொள்ள வேண்டும் என கூட்டு அறிக்கை விடுத்துள்ளன.
- இந்த 5 நாடுகள் சிறுசிறு நாடுகளிடையே போர் நிகழ்வதை தவிர்த்தலிலும் உத்திசார் இடர்களைக் குறைக்கவும் முற்படுகின்றன.
- இவை அனைத்து நாடுகளுடன் இணைந்து ஒரு பாதுகாப்புமிக்க சூழலை உருவாக்கச்

செய்வதற்கு முயல்கின்றன.




## IHU திரிபு




- பிரான்சு நாட்டிலுள்ள அறிவியலாளர்கள் மற்றும் நிபுணர்கள் 'IHU' எனப்படும் ஒரு புதிய கோவிட்-19 திரிபினை அடையாளம் கண்டுள்ளனர்.
- இந்தப் புதிய திரிபானது ஓமைக்ரானை விட அதிக பிறழ்தலைக் கொண்ட ஒரு திரிபு ஆகும்.
- B.1.640.2 அல்லது IHU எனப்படும் இந்தத் திரிபானது IHU மத்தியத் தரைக்கடல் தொற்றுக் கல்வி நிறுவனத்தின் கல்வியாளர்களால் முதன் முதலில் கண்டறியப்பட்டது.
- இது ஓமைக்ரானை விட அதிகமாக, 46 பிறழ்வுகளைக் கொண்டுள்ளது.

## புதிய மீயொலி சிர்கான் ஏவுகணைகள்

- ரஷ்ய நாடானது, சுமார் 10 புதிய சிர்கான் மீயொலி சீர்வேக ஏவுகணைகளை போர்க் கப்பலிலிருந்தும் மற்ற இரண்டு புதிய ஏவுகணைகளை நீர்மூழ்கிக் கப்பலிலிருந்தும் ஏவி வெற்றிகரமாகப் பரிசோதித்தது.

- சிர்கான் ஏவுகணையானது ஒலியை விட 9 மடங்கு அதிக வேகத்தில் பறக்கும் திறனும், 1000 கிலோமீட்டர் (620 மைல்கள்) தூர வரம்பும் உடையதாகும்.




## ஐரோப்பிய ஒன்றியத்தின் தலைமைப் பொறுப்பு




- பிரான்சு நாடானது 2022 ஆம் ஆண்டு ஜனவரி 01 முதல் ஐரோப்பிய ஒன்றியத்தின் சுழற்சி முறையிலான தலைமைப் பொறுப்பினை ஏற்றுக் கொண்டுள்ளது.
- பிரான்சு, 2022 ஆம் ஆண்டு ஜுன் 30 வரையில் 6 மாதங்களுக்கு இந்தப் பொறுப்பினை வகிக்க உள்ளது.
- ஐரோப்பிய ஒன்றியத்தின் தலைமைப் பொறுப்பினை வகிக்க உள்ள பிரான்சு நாட்டின் குறிக்கோள், "மீட்சி, வலிமை, உடைமை" என்பதாகும்.

- 6 மாத தலைமைத்துவம் நிறைவடைந்ததும் பிரான்சை அடுத்து செக் குடியரசு இந்தப் பொறுப்பினை ஏற்கும்.

# பொருளாதாரச் செய்திகள்

## சிறுசேமிப்புத் திட்டங்கள் மீதான வட்டி வீதங்கள்

Latest Post Office Interest Rates January - March 2022
(www.basunivesh.com)

| Sl No. | Scheme Name | Current Interest Rate | Revised Interest Rate | Frequency of Compounding | Effective Return | Minimum Deposit | Maximum Deposit | Tenure |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | Savings Deposit | 4.00% | 4.00% | NA | 4% | Rs.20 for opening | No Limit | NA |
| 2 | Term Deposit 1 Yr | 5.50% | 5.50% | Qly | 5.61% | Rs.200 | No Limit | 1 Yr |
| 3 | Term Deposit 2 Yrs | 5.50% | 5.50% | Qly | 5.61% | Rs.200 | No Limit | 2 Yrs |
| 4 | Term Deposit 3 Yrs | 5.50% | 5.50% | Qly | 5.61% | Rs.200 | No Limit | 3 Yrs |
| 5 | Term Deposit 5 Yrs | 6.70% | 6.70% | Qly | 6.87% | Rs.200 | No Limit | 5 Yrs |
| 6 | RD-5 Yrs | 5.80% | 5.80% | Qly | 5.92% | Rs.10 a month | No Limit | 5 Yrs |
| 7 | NSC-5 Yrs | 6.80% | 6.80% | Yearly | 6.80% | Rs.100 | No Limit | 5 Yrs |
| 8 | Post Office Monthly Income Scheme (MIS) | 6.60% | 6.60% | NA | 6.60% | Rs.1,500 | Rs.4.5 Lakh (Single) Rs.9 Lakh (Jointly) | 5 Yrs |
| 9 | Public Provident Fund (PPF) | 7.10% | 7.10% | Yearly | 7.10% | Rs.500 per year | Rs.1.5 Lakh per year | 15 Yrs |
| 10 | Senior Citizen Savings Scheme (SCSS) | 7.40% | 7.40% | NA | 7.40% | Rs.1,000 | Rs.15 Lakh | 5 Yrs |
| 11 | Kisan Vikas Patra (KVP) | 6.90% | 6.90% | Yearly | 6.90% | Rs.1,000 | No Limit | 124 Months |
| 12 | Sukanya Samriddhi Scheme | 7.60% | 7.60% | Yearly | 7.60% | Rs.1,000 | Rs.1.5 Lakh per year | 21 Yrs |

Note:-KVP will now double in 124 months.

- 2021-22 ஆம் நிதி ஆண்டின் (2022 ஜனவரி – பிப்ரவரி – மார்ச்) 4வது காலாண்டிற்கான சிறு சேமிப்புத் திட்டங்கள் மீதான வட்டி வீதங்கள் மாற்றப்படாது.
- இது 2021-22 ஆம் ஆண்டின் 3வது காலாண்டில் (2021 அக்டோபர் – நவம்பர் – டிசம்பர்) நிர்ணயிக்கப் பட்ட அளவிலேயே இருக்கும்.
- சிறுசேமிப்புத் திட்டங்களில் அதிக அளவிலான ஒரு பங்கினை அளிப்பது மேற்கு வங்காளம் என்பது குறிப்பிடத்தக்கது.
- இதனைத் தொடர்ந்து உத்தரப் பிரதேச மாநிலம் திகழ்கிறது.
- சிறுசேமிப்புத் திட்டங்களுக்கான வட்டி விகிதங்களை காலாண்டு அடிப்படையில் ஒன்றிய அரசு அறிவிக்கிறது.

## நிப்பான் இந்தியா நிஃப்டி ஆட்டோ ETF

- நிப்பான் லைஃப் இந்தியா சொத்து மேலாண்மை நிறுவனமானது நிப்பான் இந்தியா நிஃப்டி ஆட்டோ ETF (exchange-traded funds) என்ற ஒரு திட்டத்தினைத் தொடங்குவதாக அறிவித்தது.
- இது இந்தியாவில் இம்மாதிரியிலான முதல் வகையாகும்.
- இந்தப் புதிய நிதி அளிப்புகளானது 2022 (The New Fund Offer) ஆம் ஆண்டு ஜனவரி 05 அன்று தொடங்கி 2022 ஆம் ஆண்டு ஜனவரி 14 அன்று நிறைவடைகின்றன.
- இதற்கான குறைந்தபட்ச முதலீட்டுத் தொகை ரூ.1000 ஆகும்.
- அதன் பிறகு முதலீட்டாளர்கள் ஒரு ரூபாயின் மடங்குகளில் இதில் முதலீடுகளைச் சேர்க்கலாம்.
- நிப்பான் இந்தியா நிஃப்டி ஆட்டோ ETF (பரிமாற்ற வர்த்தக நிதி) என்பது நிஃப்டி ஆட்டோ குறியீட்டினை ஒத்திருக்கும் ஒரு திறந்தவெளி திட்டமாகும்.

- இது 15 முன்னணி நிறுவனங்களுக்கான (நிஃப்டி ஆட்டோ குறியீடு செயல்முறைப்படி) வெளிப்பாட்டினை வழங்கும் ஒரு குறியீட்டினைப் போன்ற விகிதத்தில் உள்ள நிஃப்டி ஆட்டோ குறியீட்டினை உள்ளடக்கியப் பங்குகளில் முதலீடு செய்யும்.
- இங்கு நிறுவனம் என்பது 2, 3 (அ) 4 சக்கர வாகனங்கள் மற்றும் வாகனத் துணைக் கருவிகள் மற்றும் டயர்கள் உள்ளிட்டத் துறைகளை சார்ந்த வாகன நிறுவனங்களைக் குறிக்கச் செய்கிறது.




# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## குவாட்ரேன்டிட் விண்கல் பொழிவு



- குவாட்ரேன்டிட் என்ற ஒரு விண்கல் பொழிவானது ஒவ்வோர் ஆண்டின் ஜனவரி மாதத்திலும் நிகழ்கிறது.
- இந்தப் பொழிவின் கதிர்வீச்சுப் பகுதியானது (பிரகாசமான பகுதி) பூடெஸ் என்ற ஒரு விண்மீன் திரளில் அமைந்துள்ளது.

- வால் நட்சத்திரங்கள் விட்டுச் சென்ற கூளங்கள் மற்றும் தூசிகளின் காரணமாக விண்கல் பொழிவுகள் ஏற்படுகின்றன.
- ஜெமினிட்ஸ் விண்கல் பொழிவு டிசம்பர் மாதத்தில் நிகழ்கிறது.
- பெர்செயிட்ஸ் விண்கல் பொழிவு ஆகஸ்ட் மாதத்தில் நிகழ்கிறது.
- குவாட்ரேன்டிட் விண்கல் பொழிவானது (Quadrantid meteor shower) ஜெமினிட்ஸ் மற்றும் பெர்செயிட்ஸ் (Geminids and Perseids) ஆகியவை போன்று பிரகாசமானது இல்லை.
- ஏனெனில் இது உருவாவதன் மீதான உச்சகட்ட நிலையின் கால அளவு ஒப்பீட்டளவில் குறுகியது ஆகும்.

# மாநிலச் செய்திகள்

## மாவட்ட வாரியான நல்லாட்சிக் குறியீடு




- ஜம்மு & காஷ்மீர் ஒன்றியப் பிரதேசமானது இந்தியாவின் முதலாவது மாவட்டங்கள் வாரியான நல்லாட்சிக் குறியீட்டினை மேற்கொள்ள உள்ளது.
- இந்தக் குறியீடானது 2021 ஆம் ஆண்டின் நல்லாட்சிக் குறியீட்டின் மாதிரி வடிவில் தயாரிக்கப் பட்டது.
- இது 10 வெவ்வேறு துறைகளில் 58 குறிகாட்டிகளைக் கருத்தில் கொண்டு கணக்கிடப் பட உள்ளது.
- ஜம்மு & காஷ்மீர், தனது மாவட்ட நிர்வாகத்தினை நாட்டின் சிறந்த நிர்வாகமுடைய பிற மாவட்டங்களுக்கு இணையான நிலைக்கு உயர்த்துவதற்கு இது உதவும்.

# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## அசோக் எல்லுசுவாமி

- தனது மின்சார வாகன நிறுவனத்தின் ஆட்டோ பைலட் என்ற ஒரு குழுவில், இந்திய வம்சாவளியைச் சேர்ந்த சென்னையின் அசோக் எல்லுசாமி என்பவரே அதன் முதல் ஊழியராக நியமிக்கப் பட்டுள்ளார் என டெஸ்லாவின் நிறுவனர் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரியான எலான் மஸ்க் தெரிவித்துள்ளார்.

❖ டெஸ்லாவில் இணையும் முன்பு, வோல்க்ஸ்வேகன் மின்னணு ஆராய்ச்சி ஆய்வகம் மற்றும் WABCO வாகனக் கட்டுப்பாட்டு அமைப்பு ஆகியவற்றில் எல்லுசுவாமி ஈடுபட்டு இருந்தார்.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★